# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 24.07.2026
## விசாரணை நாள் 17.07.2026

## நேரடி விசாரணை: மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை
## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-7842/A/2023**

திரு. M. லாரன்ஸ் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
மதுரை மாவட்டம் -625 020.

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 17.07.2026 அன்று மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. M. லாரன்ஸ் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.பெ,ரா.வெற்றிவேந்தன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 31.12.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 28.12.2024ம் தேதியன்று வெளிவந்த தினமலர் (மதுரை பதிப்பகம்) செய்திக் குறிப்பில் லஞ்சப் புகாருக்கு உள்ளான நபருக்கு எதிராக எந்த ஆவணங்களின் அடிப்படையில் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டது என்ற விபரத்தையும் மற்றும் அத்தகை ஆவணங்களின் நகலையும், லஞ்ச புகாருக்கு உள்ளான நபருக்கு எதிராக தினமலர் செய்தித் தாளில் பிரசுரிக்க செய்த செய்தியாளரின் பெயர் மற்றும் விவரங்களை தகவல்கள் மற்றும் நகல்களாக வழங்கக் கேட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்திருந்தார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 04.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அந்த தகவலில் திருப்தி அடையாத காரணத்தால், மனுதாரர், 05.02.2025 நாளிட்ட பிரிவு **19(1)**-ன் கீழ் முதலாம் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு தாக்கல் செய்துள்ளார். செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர், மதுரை அவர்கள் 10.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அந்த தகவலில் திருப்தி அடையாத காரணத்தால், மனுதாரர் 18.02.2025 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 17.07.2026 முற்பகல் மதுரை மாவட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொது அதிகார அமைப்பின் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மதுரை அவர்கள் மனுதாரர் 28.12.2024ம் தேதியன்று வெளிவந்த தினமலர் (மதுரை பதிப்பகம்) செய்திக் குறிப்பில் லஞ்சப் புகாருக்கு உள்ளான நபருக்கு எதிராக எந்த ஆவணங்களின் அடிப்படையில் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டது என்ற விபரத்தையும் மற்றும் அத்தகை ஆவணங்களின் நகலையும், லஞ்ச புகாருக்கு உள்ளான நபருக்கு எதிராக தினமலர் செய்தித் தாளில் பிரசுரிக்க செய்த செய்தியாளரின் பெயர் மற்றும் விவரங்களை தகவல்களாக கோரியுள்ளதாகவும், மனுதாரர் கோரிய தகவல்கள் முற்றிலும் தனியார் நிறுவனத்தை சார்ந்தது என்றும், இது தொடர்பாக இவ்வலுவலகத்தில் எந்த தகவலும் இல்லை எனவும், ஏற்கனவே 04.02.2025 மற்றும் 10.02.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடித்ததின் நகலினை பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் பொதுத் தகவல் அலுவலர் தான் கோரிய தகவல்கள் தினமலர் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டதை தனியார் நிறுவனத்தை சார்ந்தது எனத் தெரிவித்து தகவல் வழங்க மறுத்து ஏற்புடையதல்ல என ஆணையத்தில் தெரிவித்தார். அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பத்திரிக்கை துறையை தனியார் நிறுவனம் என்று தகவல் வழங்கியுள்ள பொதுத் தகவல் அலுவலர் மீது பிரிவு 19(8)(b)இன் கீழ் உரிய நடவடிக்கையும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1) மற்றும் 20(2)இன் கீழ் துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் தினமலர் செய்தித்தாள் என்ற தனியார் நிறுவனத்தால் பிரசுரிக்கப்பட்ட செய்திகள் எனவும், தனியார் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005இன் கீழ் கோர இயலாது. தகவல் பெறும் **உரிமைச் சட்டம்,** அரசாங்கத்தால் கணிசமாக நிதியளிக்கப்படும், சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்படும் அரசு அமைப்புகள், பொது அதிகார அமைப்புகள் மற்றும் நிறுவனங்களுக்கு மட்டுமே பொருந்தும். *தினமலர்* ஒரு தனியார் ஊடக நிறுவனம் என்பதால், பொது அதிகார அமைப்பு இல்லை என்பதாலும், இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து இவ்வாணையம் உத்தரவிடுகின்றது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-7842/A/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
மாவட்டக் ஆட்சியராக வளாகம்,
மதுரை மாவட்டம் -625 020.

**<u>மனுதாரர்</u>**
திரு. M. லாரன்ஸ்,
2/1152, சசிநகர் 2வது தெரு,
கண்ணனேந்தல் மெயின் ரோடு,
அய்யர்பங்களா,
மதுரை- 625 014.

Je/PA 18.07.2026